காரணமே இந்தத் துறையில் அலுவலர்கள் காவல் துறையிலிருந்து அங்கே டெபுட்டேசனாக வருகிறார்கள். அவர்கள் வருகிறபோதே இந்தத் துறையை ஏதோ நமக்கு அளிக்கப்பட்ட தண்டனை என்கிற அளவிலே அவர்களுடைய செயல்பாடு இருக்கிறது. எனவே, இதற்காகவே ஒரு தனித் துறையை அமைத்து இளம் வழக்கறிஞர்களை நியமித்து, இவற்றை வேகப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட நலத் துறையின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட முதல்வரவர்கள் இப்போது ஐ.ஜி. அந்தஸ்தில் ஒரு ஐ.பி.எஸ். அதிகாரியை நியமித்துள்ளார்கள். இந்தத் துறையின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதற்காகவே இது போன்று முதலமைச்சரவர்கள் நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். நிலுவையில் உள்ள வழக்குகளைச் சரி செய்வதற்காக சட்டத்துறை அமைச்சரும் நானும் கலந்து பேசியிருக்கிறோம். இதற்காக சிறப்பு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 38. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.

38—

திருத்தணி அருள்மிகு முருகன் கோவிலுக்கு பாதுகாப்புப் படை.

*16632—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணி அருள்மிகு முருகன் திருக்கோவிலுக்குப் பாதுகாப்புப் படையும் எச்சரிக்கை மணியும் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 27]

ஐயா நாராயணன் துணையோடு, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி நாராயணீயின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, என் பதிலைக் கூறுகிறேன். திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மலைக்கோயில் எச்சரிக்கை மணி (அபாயச் சங்கு) பொருத்தப்பட்டு கடந்த 10 ஆண்டுக் காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. மேலும், பாது காப்புப்படையும் செயலாற்றி வருகிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் பாதுகாப்புப்படை உடனடியாக அமைத்ததற்கு எனது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி.

திரு. ஆர். சிங்காரம் : நன்றிதான். பேராவூரணி ஸ்ரீ நீலகண்டப் பிள்ளையார் கோவிலுக்கு, என்னுடைய கோரிக் கையை ஏற்று, திருமண மண்டபம் கட்ட 7 இலட்சம் ரூபாய் அனுமதித்ததற்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் பாராட்டுக்களையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள் கிறேன். இந்த முருகனும் நீலகண்டனும் இரண்டு பேரும்— இந்த இரண்டு பேரும்—மிகப் பெரிய சக்தி படைத்தவர்கள். இந்த இரண்டு சக்திகளும்தான் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு மிகப் பெரிய வெற்றியினை (மேசையைத் தட்டும் ஒலி) கொடுத் துக்கொண்டிருக்கின்றன. இந்த இரண்டு சக்திகளும் எம் முருகப்பெருமான் ஆசீர்வதிக்கின்ற கைக்குள்தான் இருக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியுடன் தெரி வித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 39. திரு. து. மூர்த்தி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

39—

சீர்காழி மீனவர்களுக்கு விசைப்படகு

*15484— திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் உள்ள கட்டுமரம் வைத்துள்ள மீன வர்களுக்கு விசைப்படகு வாங்கிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?